காலை முரசு

பக்கங்கள்:-16

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | மாசி 04 | ஞாயிற்றுக்கிழமை | 16.02.2025 | அதிர்வு 198

## அநுரவின் பட்ஜட் நாளை சபையில்



2025ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தை நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நிதி அமைச்சர் 06



### யாழ். ஏழாலையில் நேற்று

# பிரதமர் பங்கேற்ற கூட்டத்தில் பதற்றம்

### காணி விடுவிப்பு தொடர்பில் அவர் வாய்திறக்காமையால்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் பிரதமர் ஹரிணி அமரசூரிய பங்கேற்ற கூட்டத்தில் விடுவிக்கப்படாத வலிகாமம் வடக்கு காணிகள் தொடர்பாக காணி உரிமையாளர்கள் கேள்வி கேட்டதால் பதற்றமான நிலைமை ஏற்பட்டது.

பிரதமர் பங்கேற்ற தேசிய மக்கள் சக்தியின் உடுவில் தொகுதி மக்கள் சந்திப்பு ஏழாலை ஏழு கோயிலடியில் நேற்று மாலை நடைபெற்றது. 06

# விபத்தில் சிக்கிய இளங்குமரன் எம்.பியை வைத்தியசாலையில் பார்வையிட்ட பிரதமர்

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

விபத்தில் சிக்கிக் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கருணைநாதன் இளங்குமரனைப் பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரிய நேரில் சென்று பார்வையிட்டார்.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு நேற்று இரவு சென்ற பிரதமர், இளங்குமரன் எம்.பியின் உடல் நிலைமை 06






இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு இன்று மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் கூடுகின்றது. காலை 10 மணி முதல் கூட்டம் நடைபெற இருக்கின்றது.

கடந்த 8 ஆம் திகதி நடைபெற இருந்த இந்தக் கூட்டம் கட்சியின் முன்னாள் தலைவர் மாவை சேனாதிராஜாவின் மறைவை அடுத்து, இன்றைய தினத்திற்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

மாவை சேனாதிராஜாவின் இறுதி நிகழ்வையொட்டி இடம்பெற்ற சர்ச்சைக்குரிய விடயங்கள், நாடாளுமன்றத்தில் சுமந்திரன் தொடர்பாக நாடாளுமன்ற குழு தலைவர் சிறிதரன் ஆற்றிய உரை ஆகியவை குறித்து இன்றைய கூட்டத்தில் காரசாரமாக விவாதிக்கப்படக்கூடிய சாத்தியங்கள் தென்படுகின்றன.

வரும் உள்ளூராட்சி தேர்தலை ஏனைய தமிழ் கட்சிகளோடு சேர்ந்து பொதுவான இணக்கப்பாட்டில் அணுகுவது தொடர்பான விடயமும் இன்றைய கூட்டத்தில் பேசப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 06



# சட்டத்தரணிகள் சங்கத் தலைவருக்கு லசந்தவின் மகள் எழுதிய கடிதம்

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் மகள் அஹிம்சா விக்ரமதுங்க இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் அனுர பி.மெத்தே கொடவுக்கு கடிதமொன்றை எழுதியுள்ளார்.

கடந்த காலங்களில் கவனத்தை ஈர்த்துள்ள பல குற்றவியல் விசாரணைகள் மீதான கடுமையான விமர்சனங்களை முன்வைத்து இந்தக் கடிதத்தை அவர் எழுதியுள்ளார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் அனுர பி. மெத்தேகொடவுக்கு அஹிம்சா விக்ரமதுங்க எழுதிய கடிதத்தில் சட்டமா அதிபர் அலுவலகம் முறையாக நீதி வழங்கத் தவறியதற்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் இரண்டு வழிகளில் பதிலளித்துள்ளதாகக் கூறியுள்ளார்.

மனித உரிமைகளுக்காகப் போராடுவதில் சட்டத்தரணிகள் சங்கம் முன்னணியில் இருப்பதாக அனுர பி. மெத்தேகொட ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையும் இங்கே மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

இருப்பினும் தனது தந்தையின் கொலைக்கு காரணமானவர்கள் மீது வழக்குத் தொடுப்பதில் ஏற்பட்ட நீண்டகால தாமதம் தொடர்பில் மெத்தேகோட கேள்வி கேட்கத் தவறியதை மேற்கோள் காட்டி சட்டத்தரணிகள் சங்கத் தலைவரின் நீதிக்கான அர்ப்பணிப்பு தொடர்பில் அஹிம்சா விக்கிரமதுங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

திரிபுபடுத்தப்பட்ட பொலிஸ் அறிக்கைகள் உட்பட முக்கியமான ஆதாரங்களை புறக்கணித்ததாகவும் முழுமையாக விசாரிக்காமல் அல்லது அனைத்து உண்மைகளையும் கருத்தில் கொள்ளாமல் முடிவுகளை எடுத்ததாகவும் அஹிம்சா விக்ரமதுங்க சட்ட மாஅதிபர் மீது குற்றம் சாட்டியுள்ளார்.

சட்டவாட்சியை குறைத்து மதிப்பிடலுக்கு உட்படுத்தியதற்காக சட்ட மாஅதிபருக்கு எதிராக குற்றப்பிரேரணை கொண்டுவர வேண்டும் என்று அவர் மேலும் கோரியுள்ளார்.

தனது தந்தைக்கு மட்டுமல்ல பாரிந்த ரணசிங்கவின் மேற்பார்வையின் கீழ் தவறாகக் கையாளப்பட்ட அல்லது கைவிடப்பட்ட வழக்குகள் அனைத்தையும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும் வகையில் வலுவான நிலைக்கு கொண்டுவருவதற்காக செயற்படுமாறு அஹிம்சா விக்கிரமதுங்க சட்டத்தரணிகள் சங்கத்திடம் கோரியுள்ளார்.

# சுற்றாடல் சார்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க வட்ஸ் அப் இலக்கம்




சுற்றாடல் சார்ந்த பிரச்சினைகளுக்கான தீர்வுகளை விரைவில் கண்டறிவதற்காக புதிய வட்ஸ்அப் இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக சுற்றாடல் அமைச்சு தெரிவிக்கின்றது.

சுற்றாடலை பாதுகாப்பதற்காக பொதுமக்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்ளும் நோக்கில் இந்த வட்ஸ்அப் இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

076 641 20 29 என்ற வட்ஸ்அப் இலக்கத்திற்கு சுற்றாடல் சார்ந்த பிரச்சினைகளை குறுஞ்செய்திகளாக அனுப்ப முடியும்.

அவ்வாறு கிடைக்கும் குறுஞ்செய்திகளை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பி உடனடி மற்றும் நிலையான தீர்வுகளை பெற்றுக்கொடுக்கவும் அவற்றை தொடர்ச்சியான செயன்முறையின் ஊடாக ஆய்வுகளுக்கு உட்படுத்தவும் எதிர்பார்ப்பதாக சுற்றாடல் அமைச்சு கூறுகின்றது.

திங்கள் கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை காலை 7 மணியிலிருந்து இரவு 7 மணி வரையான இந்த வட்ஸ்அப் இலக்கத்தின் ஊடாக சுற்றாடல் சார்ந்த பிரச்சினைகளை முன்வைக்க முடியும் எனவும் சுற்றாடல் அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.



# சகல இடங்களிலும் பயிர்ச் செய்கையை முன்னெடுக்க தேசிய வேலைத்திட்டம்

பயிரிடப்படாத சகல இடங்களிலும் பயிர்ச் செய்கையை முன்னெடுப்பதற்கான தேசிய வேலைத்திட்டம் நேற்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக விவசாய மற்றும் கால்நடை வளங்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாடளாவிய ரீதியில் பயிரிடப்படாத இடங்களை அடையாளம் காண்பதற்கு நடவடிகை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய பிரதியமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

அடையாளம் காணப்பட்ட இடங்களின் காணி உரிமையாளர்களுக்கு கடிதமொன்று கையளிக்கப்படுமென பிரதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேற்படி காணி கைவிடப்பட்டுள்ளமைக்கான காரணம் அல்லது பயிரிடப்படாதுள்ளமைக்கான காரணத்தை அடையாளம் காண்பதற்கு இதனூடாக நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் தெரிவித்துள்ளார்.

நீர்ப் பிரச்சினை, விலங்குகள் சார்ந்த பிரச்சினை, சந்தை சார்ந்த பிரச்சினைகள், பணியாட்கள் சார்ந்த பிரச்சினை, பணம் அல்லது வேறு பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகள் அவர்களுக்கு காணப்படலாமெனவும், அவற்றை அறிந்து கொள்வது இதன் நோக்கமெனவும் விவசாய பிரதியமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

அடையாளம் காணப்படும் காரணங்களுக்கு இயலுமான வகையில் தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி காணி உரிமையாளரினால் அதன் பின்னரும் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியாத பட்சத்தில் வேறு நபரின் ஊடாக பயிர்ச்செய்கையை மேற்கொள்ள ஊக்குவிக்கப்படும் எனவும் விவசாய பிரதியமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

# வெப்பமான வானிலை மேலும் அதிகரிக்கும்

இலங்கை உட்பட பூமத்திய ரேகைப் பகுதியில் அமைந்துள்ள பல நாடுகளில் தற்போதைய நாள்களில் அதிக வெப்பநிலை பதிவாகி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கைக்கு முதலாவது பருவமழை மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் கிடைக்கப்பெறும்.

வடகிழக்கு பருவமழை காலத்துக்கு முந்தைய நிலையில் பெப்ரவரி மாதம் உள்ளது.

இந்த காலப்பகுதியில் காலையில் சூரிய ஒளி பூமியைத் தீவிரமாகத் தாக்குவதுடன், தற்போதைய நாள்களில் காற்றின் ஈரப்பதனில் குறிப்பிடத்தக்க அளவு குறைவையும் அவதானிக்கலாம்.

எனவே வளிமண்டலத்தில் நீராவி சேர்க்கப்பட்டாலும், மேகங்கள் உருவாகும் போக்கு குறைந்து வருவதாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் அதுல கருணாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களிலும் மனித உடலால் உணரப்படும் வெப்பநிலையில் அதிகரிப்பு எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நாள்களில் அதிகபட்ச வெப்பநிலை 32 முதல் 36 பாகை செல்சியஸ் வரை பதிவாகக்கூடும்.

பிரதானமாக கொழும்பு, காலி, இரத்தினபுரி, திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார், அனுராதபுரம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் நேற்று முன்தினம் அதிகளவாக வெப்பநிலை பதிவாகியுள்ளது.

அதற்கமைய அதிகபட்ச வெப்பநிலை இரத்தினபுரியில் பதிவாகியிருந்த நிலையில் அங்கு 36.7 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியிருந்தது.

இந்த சூழ்நிலையில் உடல் வெப்பநிலை அதிகரிப்பது உடல்நலப் பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்பதால், பொது மக்கள் அதிக தண்ணீர் அல்லது இயற்கையான பானங்களை அருந்த வேண்டும் என சுகாதார அதிகாரிகள் சுட்டிக்



காட்டுகின்றனர்.

அதிக வெப்பநிலை காரணமாக உடலில் வியர்வையாக, நீர் மற்றும் கனியுப்புகள் வெளியேறுவதால் அதிகளவில் நீரிழப்பு ஏற்படுகிறது.

தற்போதைய நாட்களில் திறந்த வெளியில் வேலை செய்பவர்கள், குறிப்பாக நெடுஞ்சாலைகளில் பணிபுரிபவர்கள் மற்றும் விவசாயிகள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் சுகாதார அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

கடுமையான நீரிழப்பு இதயத்தையும் மூளையையும் பாதிக்கும் எனவும் சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

வெப்பமான காலநிலையில், ஈக்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் எனவும், இதனால் ஏற்படக்கூடிய வயிற்றுப்போக்கு உள்ளிட்ட நோய்கள் குறித்து அவதானமாக இருக்குமாறு அவர் கோரியுள்ளார்.

இதற்கிடையில், நிலவும் அதிக வெப்பநிலை காரணமாக, பாடசாலை விளையாட்டு நிகழ்வுகளை நடத்தும்போது ஆசிரியர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண கோரியுள்ளார்.



# எல்ல - வெல்லவாய வீதியில் கற்கள் விழும் அபாயம்

எல்ல – வெல்லவாய வீதியில் கற்கள் சரிந்து விழும் அபாயம் இருப்பதாக பதுளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

ராவணா எல்ல வனப்பகுதியில் ஏற்பட்ட தீ பரவல் காரணமாக மலை உச்சிலுள்ள பாறைகளில் உறுதியற்ற தன்மை ஏற்பட்டுள்ளதே இதற்கு காரணமாகும்.

கடந்த 2 நாள்களாக தீ பரவியிருந்ததுடன் கடும் முயற்சிகளின் பின்னர் நேற்று தீ காலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக பதுளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

முப்படையினர், வனவிலங்கு மற்றும் வனப் பாதுகாப்புத் திணைக்கள ஊழியர்களின் ஒத்துழைப்புடன் தீ அணைக்கப்பட்டுள்ளது.

தீப்பரவல் ராவணா எல்ல வனப்பகுதிக்கு கடுமையான சேதத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் பதுளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ஈ.எம்.எல் உதய குமார தெரிவித்துள்ளார்.

ராவணா எல்ல வனப்பகுதிக்கு எவரேனும் தீ வைத்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

# சிரேஷ்ட பிரஜைகளுக்கு 3000 ரூபா கொடுப்பனவு



குறைந்த வருமானம் பெறும் சிரேஷ்ட பிரஜைகளுக்கான 3000 ரூபா கொடுப்பனவை இம்மாதம் 20 ஆம் திகதி முதல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக முதியோர்களுக்கான தேசிய செயலகம் தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர் குறித்த கொடுப்பனவு ஒவ்வொரு மாதமும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக செலுத்தப்பட்டதாக அதன் பணிப்பாளர் சதுர மிஹிதும் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், பல்வேறு நடைமுறை சிக்கல்களின் காரணமாக கடந்த காலங்களில் உரிய தினத்திற்குள் அந்தக் கொடுப்பனவை வழங்க முடியாது போனமையினால் சிரேஷ்ட பிரஜைகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் கொண்டுள்ளனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் காரணமாக உரிய தரப்பினருடன் கலந்துரையாடி மேற்படி கொடுப்பனவையும் நிலுவைத் தொகையையும் தபாலகங்கள் மற்றும் உபதபாலகங்களின் ஊடாக இம்மாதம் 20 ஆம் திகதி முதல் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படுமென முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் பணிப்பாளர்ச்சதுர மிஹிதும் தெரிவித்துள்ளார்.

அஸ்வெசும பயனாளிகள் குடும்பத்திலுள்ள 70 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கான இந்த கொடுப்பனவு நலன்புரி நன்மைகள் சபையினால் நேரடியாக அஸ்வெசும கணக்குகளிலேயே வைப்புச் செய்யப்படுகின்றது.




# கல்விப் பணிப்பாளர் பதவி வெற்றிடங்கள்

3 மாகாணங்களில் கல்விப் பணிப்பாளர் பதவிகள் வெற்றிடமாக உள்ளதாக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மேற்கு, கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் இந்தப் பதவி வெற்றிடமாக இருப்பதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் 1 இல் 5 வருடங்களுக்குக் குறையாத திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்ட மற்றும் அனைத்து தகைமைகளையும் கொண்ட நபர்கள் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

இந்தப் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் அடுத்த மாதம் 3 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

# இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் பொது சுகாதார பரிசோதகர் கைது

200,000 ரூபாவை லஞ்சமாகப் பெற்றுக்கொண்ட பொது சுகாதார பரிசோதகர் ஒருவர் தல்கிரியாகம பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

லஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு அவரை கைது செய்துள்ளது.

இப்பாகமுவபகுதியில்நடாத்திச்செல்லப்படும்ஹோட்டலொன்றில் இந்த ஆண்டிற்கான வர்த்தக அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக குறித்த சந்தேகநபர் லஞ்சம் பெற்றதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கலேவெல சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தைச் சேர்ந்த பொது சுகாதார பரிசோதகர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.



# சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் டி20 இலங்கை குழாம் அறிவிப்பு

முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் பங்கேற்கும் சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடருக்கான இலங்கை குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தொடர் எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் மார்ச் 16 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்தியாவின் மும்பை, ராய்பூர் மற்றும் லக்னோவில் நடைபெறவுள்ள இந்த கிரிக்கெட் தொடரில் இலங்கை, இந்தியா, அவுஸ்திரேலியா, மேற்கிந்தியத் தீவுகள், இங்கிலாந்து மற்றும் தென்னாப்பிரிக்க அணிகள் மோதவுள்ளன.

இதற்கமைய, குமார சங்கக்கார தலைமையிலான குறித்த குழாமில் உபுல் தரங்க, ரமேஸ் களுவிதாரன, லகிரு திரிமான, ஜீவன் மெண்டிஸ், சுரங்க லக்மால், இசுரு உதான தில்ருவான் பெரேரா, சீக்குகே பிரசன்ன, தம்மிக்க பிரசாத், சதுரங்க டி சில்வா, சிந்தக ஜெயசிங்க, நுவான் பிரதீப் ஆகியோர் இடம்பெறுகின்றனர்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழரசுக் கட்சி வழக்கு தொடர்பாக மத்திய குழு ஒரு நிலைப்பாட்டை எடுத்து இணக்கத் தீர்வுக்கான யோசனையாக அதனை முன்வைக்கத் தீர்மானம் எடுத்திருக்கையில், அதற்கு முரண்படும் விதத்தில் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறிதரன், குகதாசன் எம்.பி. மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் ஆகியோர் நீதிமன்றுக்கு தம்பாட்டில் சமர்ப்பித்த இணக்கத்துக்கான அறிக்கை தொடர்பான விடயமும் இன்று காரசாரமாக விவாதிக்கப்படக் கூடிய வாய்ப்புகள் தென்படுகின்றன.

தேவையற்ற மோதல்கள், வாத பிரதிவாதங்கள் மற்றும் எதிர்க்கணைகளைத் தவிர்ப்பதற்காக சம்பந்தப்பட்ட தரப்புகள் இன்றைய கூட்டத்துக்கு சமுகமளிக்காமல் தவிர்க்கக் கூடும் என்று ஒரு பேச்சு அடிபட்டது.

எது, எப்படி என்றாலும், இன்றைய தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூட்டம் தீர்க்கமான சில முடிவுகளை எடுக்கும் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன.

இலங்கைத் தமிழரசு கட்சியின் வழக்கு இப்போதே நிலையில் மேலும் குறைந்தபட்சம் ஒரு வருடத்துக்காவது தீர்வு இன்றி, இழுபடக்கூடிய நிலைமை தென்படுவதால், தற்போதைய கட்டமைப்போடு கட்சியை தொடர்ந்து முன்கொண்டு கொள்வதற்கான திட்டங்கள் குறித்தும் இன்றைய கூட்டத்தில் பேசப்படக் கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

கட்சியின் கட்டுப்பாட்டை மீறி, ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் செய,ற்பட்டவர்கள் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய ஒழுங்கு நடவடிக்கைகள் குறித்தும் அவற்றுக்கான ஒழுங்கு நடவடிக்கை குழு பற்றியும் கூட இன்றைய கூட்டத்தில் ஆராயப்படும் வாய்ப்பு இருப்பதாகத் தெரியவந்தது.

உள்ளூராட்சித் தேர்தலை தமிழரசுக் கட்சி எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றது என்பதற்கான அடிப்படைகள் பெரும்பாலும் இன்று தீர்மானிக்கப்படும் என நம்பப்படுகின்றது.

## விபத்தில் சிக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

தொடர்பில் வைத்தியர்களிடம் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் எஸ்.சிறீபவானந்தராஜா, யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

இளங்குமரன் எம்.பி. பயணித்த கார் நேற்று மாலை விபத்தில் சிக்கியது.

கிளிநொச்சியில் இருந்து நேற்று மாலை யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்த இளங்குமரன் எம்.பியின் வாகனம் சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தனங்கிளப்பு பகுதியில் எதிர்த் திசையில் நோக்கி வந்த பட்டா வாகனத்தோடு மோதி விபத்துக்குள்ளானது.

தலையில் காயமடைந்த நிலையில் இளங்குமரன் எம்.பி. யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

## கார் விபத்து தொடர்பில்

# பைசல் எம்.பியின் சாரதியான சகோதரருக்கு விளக்கமறியல்



(எம்.எச்.எம். சியாஜ்)

கார் விபத்து தொடர்பாக தேசிய மக்கள் கட்சியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஜே.எம் பைசலின் சகோதரரை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாரவில பதில் நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பயணித்த கார், வீதியை விட்டு விலகி, எதிர்த் திசையில் வந்த மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் விபத்து இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற நபர் விபத்தில் உயிரிழந்த நிலையில் விபத்து நடந்த நேரத்தில் காரின் சாரதியாக இருந்த புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் சகோதரரைக் கொஸ்வத்த பொலிஸார் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்தமை குறிப்பிடத்தக்கது.

## பிரதமர் பங்கேற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நூற்றுக்கணக்கான மக்கள் கூடிய இந்தச் சந்திப்பில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி, யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளரும் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினருமான கபிலன் உள்ளிட்டோர் உரையாற்றினர்.

இறுதியாக பிரதமர் ஹறிணி அமரசூரிய தேசிய மக்கள் சக்தி அரசின் வேலைத் திட்டம் தொடர்பில் உரையாற்றினார்.

அந்த உரையில், காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விவகாரம், காணாமல் ஆக்கப்பட்டோர் விவாகரம் உள்ளிட்டவை தொடர்பாகப் பிரதமர் எதுவும் தெரிவித்திருக்கவில்லை.

இந்நிலையில், பிரதமர் உரையாற்றி விட்டு மேடையில் இருந்து இறங்கி மக்களைச் சந்திக்க அருகில் வந்தார்.

இதன்போது பிரதமரைச் சந்தித்து தமது பிரச்சினைகள் தொடர்பாகப் பேசக் காத்திருந்த காணி உரிமையாளர் ஒருவர், பலாலி பகுதியில் காணிகள் விடுவிக்கப்படாமல் இருப்பது தொடர்பாக தனது ஆதங்கத்தைப் பிரதமரிடம் நேரடியாகத் தெரிவித்தார்.

இதன்போது பிரதமர் ஏனையவர்களுடன் பேசச் சென்றபோது குறித்த காணி உரிமையாளர், "உங்கள் அரசியலுக்காக எங்களைப் பயன்படுத்த வேண்டாம்" – என்று தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் தெரிவித்தார்.

இதன்போது பிரதமரைச் சூழ்ந்திருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் குறித்த காணி உரிமையாளரை அங்கிருந்து அகற்றியதுடன் அதனைக் காணொளி எடுத்த ஊடகவியலாளர்களுடனும் முரண்பாட்டில் ஈடுபட்டனர். இதனால் அங்கு சிறிது நேரம் குழப்பமான நிலைமை ஏற்பட்டது.

இதனையடுத்து பிரதமர் ஹறிணி அமரசூரிய பாதுகாப்பு அதிகாரிகளால் அங்கிருந்து அழைத்துச் செல்லப்பட்டார்.

## அநுரவின் பட்ஜட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்ற ரீதியில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து ஒதுக்கீட்டுச் சட்டமூலம் தொடர்பான விவாதம் எதிர்வரும் 18ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 21 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 9 ஆம் திகதி முதலாவது மதிப்பீட்டுக்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் தொடர்பான இரண்டாவது மதிப்பீடு பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை ஏழு நாட்கள் நடைபெறவுள்ளது.

அத்துடன் இந்த மாதம் 25 ஆம் திகதி மாலை 6 மணிக்கு நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து 2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் குறித்த குழுநிலை விவாதம் இந்த மாதம் 27ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 21ஆம் திகதி வரை 4 சனிக்கிழமை நாட்கள் உள்ளடங்கலாக 19 நாட்கள் இடம்பெறவுள்ளன. இதற்கான வாக்கெடுப்பு மார்ச் மாதம் 21ஆம் திகதி மாலை 6 மணிக்கு நடத்தப்படும்.

பாதீட்டு காலப் பகுதியில் காலை 9.30 மணி முதல் 10 மணி வரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 10 மணி முதல் மாலை 6 மணி வரையான காலப் பகுதியில் பாதீட்டு விவாதம் இடம்பெறும்.

வாக்கெடுப்பு நடத்தப்படும் தினங்களான பெப்ரவரி 25 மற்றும் மார்ச் 21ஆம் திகதிகள் தவிர ஏனைய அனைத்து நாட்களிலும் மாலை 6 மணி முதல் 6.30 வரையான காலப் பகுதி சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணைக்காக ஒதுக்கப்பட்டிருக்கும்.



# செம்மணி பகுதியில் மனித எச்சங்கள்: நேரில் பார்வையிட்ட முன்னணியினர்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். செம்மணிப் பகுதியில் குழிகள் வெட்டப்பட்டபோது அதற்குள் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பகுதியை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் சென்று பார்வையிட்டனர்.

இது தொடர்பாக அந்தக் கட்சியின் அந்தப் பிரதேசத்துக்கான நிர்வாகத்தின் உறுப்பினர் கிருபாகரன் தகவலின் பேரில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன், ஊடகப் பேச்சாளர் கனகரட்னம் சுகாஷ் மற்றும் வாசுகி சுதாகரன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

இதனை ஆய்வு செய்து விசாரணை முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.













# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## மீண்டும் கூட்டமைப்பு?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்டாயம் மீண்டும் உருவாக வேண்டும் என ஜனநாய தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

“தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாகாமல் விட்டால் இன்றைக்கு இருக்கின்ற சூழலே தொடர்ச்சியாக நீடிக்கும். அதாவது பிரதேச சபைகளை, மாகாண சபைகளை ஏனையவர்கள் கைப்பற்றுவார்கள். அதன் பிறகு எங்களுடைய தேசியம் என்ற விடயம் அங்கே இல்லாமல் போய் விடும். இப்பொழுதே தேசியம் அரிதாகிக் கொண்டு செல்கின்றது.

“தற்போதைய அரசாங்கம் வடக்கு, கிழக்கிலுள்ள பிரதேச சபைகள் மற்றும் நகர சபைகளை கைப்பற்றுவதற்காகத் திட்டமிட்டு செயற்படுகின்றது. எங்களுக்கிடையில் ஒற்றுமையின்மையால் அவர்கள் பிரதேச சபைகள் மற்றும் நகர சபைகளை கைப்பற்றினால் மாகாண சபையையும் கைப்பற்றுவதற்கான வாய்ப்பு இருக்கின்றது. ஆகவே தமிழ் தேசிய கூட்டமைப்பு மீண்டும் உருவாக்கப்பட வேண்டும். அதற்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்குவதற்கு தயாராக இருக்கின்றோம்.” என அவர் மேலும் தெரிவித்திருக்கின்றார்.

வாஸ்தவமான கருத்து. ஒரு வகையில் இது அவரது பட்டறிவுப் பகிர்வு. அவரது பட்டறிவு மட்டுமல்ல, தமிழ்த் தேசியத்தை வலியுறுத்துகின்ற சகல தரப்பினரதும் அனுபவப் பாடமும் கூட.

வரப் போகின்ற உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியத்தின் வலிமை தேர்தல் பெறுபேறுகள் மூலம் வெளிப்படுத்தப்படாவிட்டால் தமிழ்த் தேசியத்தை வலியுறுத்திப் பாதுகாக்க முயலும் தரப்புகள் தமிழர் தாயகத்தில் அரசியல் ரீதியில் நின்று பிடிப்பது துர்லபமாகிவிடும்.

ஆகவே தமிழ்த் தேசிய கட்சிகள் ஒன்றுபட்டு நின்று தங்களை வலிமையை வெளிப்படுத்திக் காட்டும் தந்திரோபாயத்தை வகுத்து, அதன்படி செயல்படுவது காலத்தின் கட்டாயமாகும். அது, பழைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற கட்டமைப்பையும் தாண்டி விரிவுபடுத்தப்பட வேண்டும்.

உள்ளூராட்சித் தேர்தல்களை ஒன்றுபட்டு ஒரே அணியாக அணுகுவதன் மூலம் அந்தச் சபைகளை கைப்பற்றுவதில் நெருக்கடி இருப்பது உணரப்பட்டிருக்கின்றது. தேர்தல் முறை அத்தகைய ஒரு இக்கட்டை ஏற்படுத்தி தந்திருக்கின்றது.

அறுபது வீதம் வட்டாரத் தெரிவும், நாற்பது வீதம் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ தெரிவும் என்ற கலப்பு பொறிமுறை சில சிக்கல்களை தரக் கூடும். அந்த பொறிமுறையை விஞ்ஞான பூர்வமாக அணுகி தேர்தல் வியூகம் வகுக்கப்பட வேண்டும்.

அதற்கு முதலில் தேர்தலில் உடன்பாடுகளுக்கு வருகின்ற ‘லெட்டர் பேட்’ கட்சிகள் சற்று வாய் அடைத்து, இருக்கின்ற நிலைமைகளுக்கு ஏற்ப இணங்கிப் போகின்ற கட்டாயம் உள்ளது. அவற்றுக்கு இணங்காத கடிதத் தலைப்பு கட்சிகளை நேரத்துடனே காய் வெட்டி விட்டு தமிழ் தேசிய கட்சிகள் ஒன்றுபடுவதும் கூட காலத்தின் கட்டாயம் தான்.

வட்டார ரீதியான தெரிவுகளை அதிக உச்சமாக பெறக்கூடிய விதத்தில் வட்டார வேட்பாளர்களை

ஒன்றுபட்டுத் தெரிவு செய்வதற்கு தமிழ் தேசிய கட்சிகள் தங்களுக்குள் முதலில் உடன்பாடு காண வேண்டும். பின்னர் அதனைக் குழப்பாமல் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்திலும் தெரிவுகளைப் பெறுவதற்காக - வட்டாரங்களில் தத்தமது கட்சிக்கான எஞ்சிய வாக்குகளை சுவீகரிக்கக் கூடியவர்களை களத்தில் நிறுத்த வேண்டும்.

ஆக, இந்த தந்திரோபாயத்தை விஞ்ஞான பூர்வமாக அணுகக்கூடியதாக அரசியல் தலைவர்கள் செயல்பட வேண்டும். வெறு றாங்கிக்கு எனக்கு இத்தனை வட்டாரம், உனக்கு அத்தனை சபை என்று அடம் பிடிக்கும் மூன்றாம் தர அரசியலை நமது தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தும் கட்சிகள் விட்டு விட்டு தேசியத்தை முன்னிறுத்திச் செயல்பட முன்வந்தால் மட்டுமே இந்த எத்தனம் வெற்றி பெறும்.

இது போன்ற ஒரு யோசனைத் திட்டம் நேற்று நடைபெற்ற ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் யாழ் மாவட்டக் கூட்டத்தில் ஆராயப்பட்டதாகவும் தெரிகின்றது. நல்ல ஆரம்பம் தான்.






# யாழ். சுழிபுரம் கூட்டத்தில் பிரதமர்

(எஸ்.நிதர்ஷன்)

பிரதமர் ஹறிணி அமரசூரிய யாழ். சுழிபுரம் பகுதியில் மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட பிரதமர் ஹறிணி அமரசூரிய பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொண்டார்.

நேற்று பிற்பகல் 2 மணிக்கு யாழ். சுழிபுரம், வழக்கம்பரை முத்துமாரி அம்மன் கோயில் வளாகத்தில் மக்கள் சந்திப்பில் அவர் கலந்துகொண்டார்.

இந்தக் கூட்டத்தில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெயசந்திரமூர்த்தி ரஜீவன், சண்முகநாதன் ஸ்ரீபவானந்தராஜா, கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.














# மாணவர்களின் இடைவிலகலுக்கு ஒருபோதும் இடமளிக்கப்படாது

## பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவிப்பு

எந்தவொரு மாணவரும் பாடசாலை கல்வியிலிருந்து இடைவிலகுவதற்கு ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாது என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் இந்து கல்லூரிக்கு நேற்று விஜய மொன்றை மேற்கொண்டிருந்த பிரதமர் அங்கு இடம்பெற்ற நிகழ் வொன்றில் உரையாற்றுகையில் இதனைக் குறிப்பிட்டுள் ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“யாழ்ப்பாணம் சிறந்த கல்விக்கான ஒரு மையமாக விளங் குகிறது.

எனவே, இங்கு உள்ளவர்களுக்குக் கல்வியின் முக்கியத் துவம் தொடர்பில் வலியுறுத்த வேண்டிய தேவையில்லை.

சமூகத்தில் சிறந்த கல்வி வாய்ப்புக்களை ஏற்படுத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கம் கல்விக்கு அதிக முக்கியத்து வத்தை வழங்கி வருகிறது.

அதற்கமைய, கல்வி மறுசீரமைப்புகளை மேற்கொள்வ தற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மாணவர்களின் இடைவிலகலை தடுப்பதற்கு நடவ டிக்கை எடுக்கப்படுவதுடன், அனைவரும் சிறந்த கல்வியை கற்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதே அரசாங் கத்தின் இலக்கு.”– என்றார்.

## இலங்கைத் துணைத் தூதரகத்தால்

# பணி நீக்கம் செய்யப்பட்ட இந்தியப் பெண்ணை மீண்டும் பணியில் அமர்த்த நீதிமன்றம் உத்தரவு



(ந.லோகதயாளன்)

இந்தியாவின் இலங்கைத் தூதரகத்தில் பணியாற்றிய சமயம் பணி நீக்கம் செய்யப்பட்ட இந்தியப் பெண்ணை மீண்டும் பணியில் இணைக்க இலங்கைத் துணைத் தூதர கத்துக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தியாவின் தமிழ்நாட்டில் சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தில், கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் உதவியாளராகப் பணியாற்றிய செந்தில்குமாரி, 2018 ஆம் ஆண்டு பணி நீக்கம் செய்யப்பட்டிருந்தார்..

இதையடுத்து, தனக்குரிய பணப் பலன்களை வழங்கக் கோரி தொழிலாளர் நல தீர்ப்பாயத்தில் செந்தில்குமாரி மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இதன்போது மனுதாரர் ஒப்பந்த தொழிலாளர் எனக் கூறி, அவரது மனு நிராகரிக்கப்பட்டிருந்தது.

மனு நிராகரிப்பை எதிர்த்து செந்தில்குமாரி தாக்கல் செய்த வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி பரத சக்கரவர்த்தி, வியன்னா ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்திய அரசு நிறைவேற்றிய தூதரக உறவு சட்டப்படி, தூதரகங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு, இந்திய சமூக பாதுகாப்பு சட்டங்கள் பொருந்தாது எனக் கூறியுள்ளதைச் சுட்டிக்காட்டி, இந்தியாவில் உள்ள தூதரகங்கள், துணை தூதரகங்களில் பணியாற்றும் இந்தியர்களுக்கு, இந்தியாவின் சமூக பாது காப்பு சட்டங்கள் பொருந்தும் எனத் தீர்ப்பளித்து செந்தில் குமாரியை மீண்டும் பணியில் சேர்க்க சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகத்துக்கு உத்தரவிட்டுள்ளார்.




# மன்னார்த் தீவில் மக்களின் வாழ்வியலைப் பாதிக்கும் கனிய மணல் அகழ்வுக்கு அனுமதிக்கவே முடியாது!

## பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவிப்பு

**(மன்னார் நிருபர்: எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் தீவில் மக்களின் வாழ்வியலும், எதிர்கால நலனையும் பாதிக்கின்ற கனிய மணல் அகழ்வுக்கு ஒரு போதும் அனுமதி வழங்க முடியாது எனவும், கனிய மணல் அகழ்வுக்காக சுற்றுச்சூழல் ஆய்வு அறிக்கையை வழங்குவதற்கு முன்னெடுக்கப்படும் கள விஜயத்தை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ். சிவகரன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்றுய் சனிக்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மன்னார் தீவில் மூன்று திட்டங்கள் அரசினால் நடைமுறைப்படுத்தப்பட இருக்கும் சூழ்நிலையில் அதானியுடைய காற்றாலை மின் உற்பத்தி திட்டத்திலிருந்து அதானி நிறுவனம் பின் வாங்கியுள்ளதாக கூறப்படுகிறது. ஆனால் அரசாங்கம். அக்குழுமத்துடன் எதிர்வரும் வாரம் பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாக அறிகிறோம்.

மின்சாரத்தை கொள்வனவு செய்வதில் விலை நிர்ணயத்தில் ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்து, அத்திட்டத்தை மீளாய்வு செய்ய அரசு குழு ஒன்றை நியமித்திருந்த சூழ்நிலையிலே அதானி குழுவினரால் இவ்வாறான அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

முழுமையாக இத்திட்டத்தில் இருந்து அவர்கள் வெளியேறுவார்களா அல்லது எதிர்வரும் வாரம் இடம்பெற உள்ள பேச்சு வார்த்தையுடன் அவர்கள் மீண்டும் இணங்கி போவார்களா என்ற கேள்வி எமக்குச் சந்தேகமாக எழுகின்றது.

எனவே மன்னார் தீவில் அவர்கள் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தை அமுல் படுத்தக் கூடாது என்பதே எமது தொடர்ச்சியான கோரிக்கையும், ஜன நாயகப் போராட்டமுமாக அமைந்துள்ளது.

மக்களின் அடிப்படை இருப்பையும், உணர்வையும், புரிந்து கொண்டு அவர்கள் மன்னார் தீவில் இருந்து வெளியேற வேண்டும். அவர்கள் வெளியேறுவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

### கனிய மணல் அகழ்வு

கனிய மணல் அகழ்வு குறித்து மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைமையில் சுமார் 23 திணைக்களங்கள் கனிய மணல் அகழ்வுக்கான சுற்றுச் சூழல் ஆய்வு அறிக்கையை வழங்குவற்குக் கள விஜயத்தை மேற்கொண்டு இரண்டு தடவைகள் வருகை தந்திருந்த போது மக்களின் எதிர்ப்பு காரணமாக அந்த இரு தடவைகளும் அவர்களினால் அந்த முயற்சியைச் செயற்படுத்த முடியவில்லை.

அவர்கள் மீண்டும் கள விஜயத்தை மேற்கொள்ள பாதுகாப்புக் கோரியுள்ளனர். பாதுகாப்புடன் சென்று கள ஆய்வு மேற்கொள்ள அவர்கள் பாதுகாப்பைக் கோரியுள்ளனர். நீதிமன்றத்தின் ஊடாக அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள் என அறிகின்றோம்.

திங்கட்கிழமை அவர்கள் சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு புதன்கிழமை மன்னாரிற்கு 23 திணைக்களங்களும் வந்து கள ஆய்வு முன்னெடுக்க திட்டமிட்டுள்ளனர் என அறிகின்றோம். எனவே கனிய மணல் அகழ்வுக்கான கள ஆய்வில் ஈடுபட அவர்கள் வருகை தரக் கூடாது. மக்களின் விருப்பம் இன்றி அவர்கள் இந்த நடவடிக்கையை முன்னெடுக்கக் கூடாது.

மன்னாரில் கடந்த ஒரு மாதத்திற்கு முன் மழை விட்டும் மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் தேங்கியுள்ள மழை நீரை வெளி யேற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் பல்வேறு விதமான சுற்றுச் சூழல் தாக்கத்தையும் சமூக இருப்புக்கான கேள்விக் குறியையும், மக்கள் சந்தித்துள்ளனர். வாழ்விடங்களில் இருக்க முடியாத ஒரு நிலைப்பாடும் காணப்படுகின்றமையினால் இந்த பகுதியில் மண் அகழ்வு செய்யக் கூடாது என்கிற மக்களினுடைய போராட்டத்தை மதித்து, அவர்களுடைய உணர்வுகளுக்கு செவி சாய்த்து, இத் திட்டத்தில் இருந்து அவர்களும் வெளியேற வேண்டும்.

அவ்வாறு இன்றி அடாத்தாக இத் திட்டத்தை நடைமுறைப்படுத்த அவர்கள் வருவர்களாக இருந்தால் மன்னார் மக்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள். அதற்கு எதிராக மாவட்டம் தழுவிய ரீதியில் பாரிய ஜனநாயகப் போராட்டத்தை மக்கள் முன்னெடுப்பார்கள்.

எனவேஅரசுஇந்தமக்களின்உணர்வுகளை புரிந்து கொண்டு. இத்திட்டங்களில் இருந்து அவர்கள் வெளியேற்ற வேண்டும். மேலும் கரையேற மணல் அகழ்வு செயல் திட்டத்தையும் அரசு கைவிட வேண்டும்.

இந்த மூன்று திட்டங்களையும் மன்னார் தீவு பகுதியில் இருந்து அவர்கள் கை விட்டு. வெளியேறி மக்களின் வாழ்வியல் இருப்புக்கும், வாழ்வியல் சுகாதார சுற்றுச் சூழல் பாதிப்புக்களில் இருந்தும் அவர்களைப் பாதுகாத்துக் கொள்ளும் நிலைப்பாட்டிற்கு அரசு சாதகமான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என மன்னார் மக்கள் சார்பில் நாங்கள் கோரிக்கை விடுக்கின்றோம். – என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த ஊடக சந்திப்பில் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட் தந்தை மாக்கஸ் அடிகளார், மீனவ சங்கப் பிரதி நிதி என்.எம்.ஆலம் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தனர்.




# ‘பிடியளவு கமநிலத்துக்கு’ எனும் தேசிய வேலைத்திட்டம் ஆரம்பம்

(கி.வசந்தன்)

“பிடியளவு கமநிலத்துக்கு“ எனும் தேசிய வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில் உள்ள கமநல சேவை நிலையங்களில் நேற்றையதினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதற்கமைவாக வவுனியா கோயில் குளம் கமநல சேவை நிலையத்திலும் இந்நிகழ்வு இடம்பெற்றது. பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்படாது இருக்கின்ற சகல வயல் மற்றும் மேட்டு நில காணிகளையும் வினைத்திறனுடன் துரிதமாக பயிரிடல் என்ற நோக்கை அடிப்படையாகக் கொண்டு இவ்வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா, கோயில்குளம் கமநல சேவை நிலையத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கலந்து கொண்ட கமக் காரர்களுக்கு பிடியளவு கமநிலத்துக்கு என்ற வேலைத்திட்டம் தொடர்பான விழிப்புணர்வுகள் வழங்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து பயிரிடாது இருக்கும் வயல்கணிகள் பார்வை யிடப்பட்டமையுடன் சம்ப்ச்ந்தப்பட்ட காணி உரிமையாளர்களுக்கு தெளிவூட்டலும் வழங்கப்பட்டது .

இதன் பின்னர் கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் பேரணியாக கமநல சேவை திணைக்களத்தில் இருந்து கொறவப்பொத்தானை வீதி வழியாக பண்டாரிக்குளம் வரை சென்று அங்கு பயிரிடாத நிலங்களை பார்வை யிட்ட பின் பட்டாணிச்சூர் வழியாக மீண்டும் கமநல சேவை நிலையத்தை வந்தடைந்தனர்.

இந்நிகழ்வில் அதிதியாக வவுனியா கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் விமலரூபன், உதவி அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.














# இந்தியா பெரிய பொருளாதார நாடாக முன்னேற இலங்கை போன்ற நாடுகளின் நட்புறவு அவசியம்

## அண்ணாமலை தெரிவிப்பு

இந்தியா பெரிய பொருளாதார நாடுகள் பட்டியலில் 2 ஆம் இடத்துக்கு முன்னேற பாகிஸ்தான், இலங்கை, மாலைதீவு போன்ற நாடுகளுடன் நட்புறவு கொண்டிருத்தல் அவசியம் என பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார்.

'ரோட்டரி மாவட்டம் 3201' சார்பில் மாவட்ட அளவிலான இரண்டு நாள்கள் கருத்தரங்கு 'ப்ளாசம்' என்ற பெயரில் கோவை – பொள்ளாச்சி சாலையில் அமைந்துள்ள ரத்தினம் தொழில்நுட்ப பூங்கா வளாகத்தில் நேற்று தொடங்கியது. இதில் தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில்,

"உலகம் முழுவதும் கடந்த பல்வேறு ஆண்டுகளாக ரோட்டரி அமைப்புகள் சிறந்த பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

குறிப்பாக, இதில் உள்ளவர்கள் உலகத்தை வாழ்வதற்கு சிறந்த இடமாக மாற்ற பல்வேறு முயற்சிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். இன்று உலகின் மொத்த இருப்பில் 58 சதவீதம் டொலரில் வைக்கப்பட்டுள்ளது. 1944 உலக வங்கி தொடங்கப்பட்டது. டொலர் முக்கிய மதிப்பாக நிர்ணயிக்கப்பட்டது. ஐக்கிய அரபிய நாடுகள் பெட்ரோலியப் பொருள்களை அதிகம் வர்த்தகம் செய்ய தொடங்கிய நிலையில் அனைத்தும் டொலரில் மேற்கொள்ளப்பட்டன. இதனால் அமெரிக்கா, டொலர் மிக அதிகளவில் அச்சிட்டது.

அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பொறுப்பேற்ற உடன் அரபு நாடுகளுக்கு சென்று பேச்சுவார்த்தை நடத்தினார். 600 பில்லியன் டொலர் மதிப்பில் அமெரிக்காவில் முதலீடுகள் செய்யப்படும் என வாக்குறுதியைப் பெற்றுத் திரும்பினார். மிக குறைந்த மக்கள் தொகை கொண்ட நோர்வே நாட்டில் 1.8 டிரில்லியன் டொலர் சேமிப்பு வைத்துள்ளது. இந்தியா 690 பில்லியன் டொலர் வைத்துள்ளது. நோர்வே உலகம் முழுவதும் 70 நாடுகளில் முதலீடு செய்துள்ளது. இதன் காரணமாகவே உலகில் பணக்கார நாடாக நோர்வே உள்ளது.

உலகில் பெரிய பொருளாதார நாடுகள் பட்டியலில் இந்தியா 5ஆம் இடத்தில் உள்ளது. அடுத்த 25 ஆண்டுகளில் 2 ஆம் இடத்துக்கு முன்னேற பல்வேறு சவால்கள் உள்ளன. குறிப்பாக பாகிஸ்தான், இலங்கை, மாலைதீவு போன்ற நாடுகளுடன் நட்புறவு தொடர வேண்டியது மிகவும் அசியம்.

அடுத்த 40 ஆண்டுகள் உலக வளர்ச்சியை நிர்ணயிக்கும் லித்தியம் போன்ற முக்கிய கனிமங்கள் ஆபிரிக்க நாடுகளில் அதிகம் உள்ளன. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த கனிமங்கள் மீது சீனா 70 சதவீதம் கட்டுப்பாட்டை கொண்டுள்ளது. அமெரிக்கா 20 சதவீதம் மட்டுமே கட்டுப்பாடு கொண்டுள்ளது. இந்தியா போன்ற மற்ற நாடுகள் 10 சதவீத கட்டுப்பாடுகளை மட்டுமே கொண்டுள்ளன. கடும் சரிவில் இருந்து பொருளாதாரத்தை மீட்டு உலகின் பெரிய பொருளாதார நாடுகள் பட்டியலில் 2 ஆம் இடத்துக்கு சீனா கொண்டு சென்றுள்ளது." – என்றார்.

# மத ரீதியாக மக்களை பிளவுபடுத்துவதற்கு அண்ணாமலை, இந்து முன்னணி முயற்சி

## செல்வப்பெருந்தகை குற்றச்சாட்டு



"அமைதிப் பூங்காவாக விளங்கிக் கொண்டிருக்கிற தமிழகத்தில் மதரீதியாக மக்களை பிளவுபடுத்துகிற அரசியலை பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை உள்ளிட்ட சிலரும் மற்றும் இந்து முன்னணி அமைப்பினரும் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்."

– இவ்வாறு தமிழ்நாடு காங்கிரஸ் கொமிட்டியின் தலைவர் செல்வப்பெருந்தகை கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"அமைதிப் பூங்காவாக விளங்கிக் கொண்டிருக்கிற தமிழகத்தில் மதரீதியாக மக்களை பிளவுபடுத்துகிற அரசியலை பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை உள்ளிட்ட சிலரும் மற்றும் இந்து முன்னணி அமைப்புகளும் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. சமீபத்தில் திருப்பரங்குன்றம் மலையில் நீண்ட நெடுங்காலமாக இந்துக்கள், இஸ்லாமியர்கள், ஜெயின் மதத்தவர்கள் உள்ளிட்ட அனைவரும் மதநல்லிணக்கத்தோடு, சகோதர, சகோதரிகளாக தங்கள் வழிபாட்டு முறைகளை அமைத்துக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

இந்தச் சூழலில் திருப்பரங்குன்றம் மலையில் நீண்டகாலமாக உள்ள தர்காவில் அசைவ உணவு சாப்பிட்டதாக பிரச்சினையை எழுப்பி, அதை அனுமதிக்கக் கூடாது என இந்து முன்னணி அமைப்பினர் போராட்டம் நடத்த முற்பட்டனர். அதற்கு மதுரை மாவட்ட பொலிஸ் அனுமதி மறுத்து விட்டது. இதற்குப் பிறகு மதுரை உயர்நீதிமன்றத்தில் இந்து முன்னணியினர் தொடுத்த வழக்கில் பழங்காநத்தத்தில் ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி தரப்பட்டு பெப்ரவரி 4 ஆம் திகதி அந்நிகழ்வு நடைபெற்றது.

அதில்சிறுபான்மையினருக்குஎதிராக வெறுப்பையும், விரோதத்தையும் வளர்க்கிற வகையில் முழக்கங்கள் எழுப்பப்பட்டதால் இந்து முன்னணியினர் மீது பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர். இந்நிலையில், வேல் யாத்திரை நடத்த வேண்டுமென்று கோரி இந்து முன்னணியின் வேறொரு பிரிவினர் சென்னை பொலிஸாரிடம் அனுமதி கேட்டனர். ஆனால், பொலிஸார் அனுமதி மறுத்ததால் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர்.

அந்த வழக்கில் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்ட தீர்ப்பில், இந்து முன்னணியில் ஒரு பிரிவினர் வேல் யாத்திரை நடத்த அனுமதி மறுக்கப்பட்டது. தமிழகத்தில் மதநல்லிணக்கம் தழைத்தோங்குவதற்கு அனைத்து வகைகளிலும் முன்னோட்டமாக அமைந்துள்ளது. சென்னை உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பில் திருப்பரங்குன்றம் மலையில் இந்துக்கள், முஸ்லிம்கள், ஜெயின் மதத்தினர் நீண்டகாலமாக அமைதியுடனும், நல்லிணக்கத்தோடும் தங்களது தனித்தனி வழிபாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த வழிபாட்டு முறைகளை பல தசாப்தங்களாக தங்களுக்குரிய இடங்களில் அமைதியாக முழு உரிமையுடன் செய்து வருகின்றனர். அதை சீர்குலைக்க யார் முயன்றாலும் தமிழக அரசு அனுமதிக்கக் கூடாது. அவர்கள் மீது கடுமையானநடவடிக்கைஎடுக்கவேண்டுமென்று சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் தமிழக அரசுக்கு ஆணையிட்டுள்ளனர். இந்த தீர்ப்பை தமிழ்நாடு காங்கிரஸ் சார்பாக மதநல்லிணக்கத்தில் நம்பிக்கை இருக்கிற அடிப்படையில் வரவேற்க கடமைப்பட்டிருக்கிறேன்." – என்றார்.

# 10,000 இற்கும் மேற்பட்ட அரச ஊழியர்கள் பணிநீக்கம்





அமெரிக்காவில் அரச நிறுவனங்களில் கடமையாற்றி 10,000 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

எலான் மஸ்க்கின் ஆலோசனையின் பேரில் அமெரிக்க ஜனாதிபதி இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி உள்துறை, எரிசக்தி, படைவீரர் விவகாரங்கள், சுகாதாரம் மற்றும் மனிதவளத் துறைகளில் உள்ள ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் பணிநீக்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து அரச ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



# மூன்றாம் பாலினத்தவர்களுக்கு அமெரிக்க இராணுவத்தில் தடை

## ட்ரம்பின் உத்தரவு அமுல்

அமெரிக்க இராணுவத்தில் மூன்றாம் பாலினத்தவர்கள் சேர்வதைத் தடை செய்யும் உத்தரவில் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கையெழுத்திட்ட நிலையில், அதனை அமல்படுத்தி அமெரிக்க இராணுவத்தில் மூன்றாம் பாலினத்தவர் சேர அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று இராணுவம் உறுதிப்படுத்தியுள்ளது.

இதுகுறித்து அமெரிக்க இராணுவம் வெளியிட்ட பதிவில்,

"மூன்றாம் பாலினத்தவர் இனி இராணுவத்தில் சேர அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் சேவையில் உள்ள உறுப்பினர்களுக்கு பாலின மாற்றம் தொடர்புடைய நடைமுறைகளைச் செய்வதோ, எளிதாக்குவதோ நிறுத்தப்படும்."

உடனடியாக அமலுக்கு வரும் வகையில், பாலின டிஸ்போரியா பாதிப்புக் கொண்ட தனிநபர்களுக்கான அனைத்து சேர்க்கைகைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. அதே போல் சேவையில் உள்ள உறுப்பினர்களுக்கு பாலினமாற்றத்தை உறுதிப்படுத்துவது அல்லது எளிதாக்குவது ஆகியவைகளுடன் தொடர்புடைய திட்டமிடப்படாத மற்றும் திட்டமிடப்பட்ட மருத்துவ நடைமுறைகளும் இடைநிறுத்தப்படுகின்றன.

பாலின டிஸ்போரியா உள்ளவர்கள் தன்னார்வத்துடன் நமது நாட்டுக்கு சேவையாற்றியுள்ளனர். அவர்கள் கண்ணியத்துடனும் மரியாதையுடனும் நடத்தப்படுவார்கள்." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாலின டிஸ்போரியா என்பது, ஒரு தனிநபரின் உயிரியல் பாலினத்துக்கும் அவர்கள் வெளிப்படுத்த விரும்பும் பாலின அடையாளத்துக்கும் இடையில் உள்ள வேறுபாட்டால் எழும் மன உளைச்சல் உணர்வாகும்.

ஆண், பெண் என்ற இரண்டு பாலினத்தை மட்டுமே அரசு அங்கீகரிக்கும் மற்றும் பெண்களுக்கான விளையாட்டு போட்டிகளில் திருநங்கைகள் கலந்து கொள்வதை தடை செய்யும் உத்தரவில் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கையெழுத்திட்டதைத் தொடர்ந்து அமெரிக்க இராணுவம் இந்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.

கடந்த 2017 முதல் 2021 வரையிலான தனது முதல் பதவி காலத்திலும் இராணுவத்தில் மூன்றாம் பாலினத்தைச் சேர்ந்தவர்கள் சேவை செய்வதை தடை செய்தார். என்றாலும் இந்த உத்தரவினை அவர் முழுமையாக செயல்படுத்துவில்லை. அவரது நிர்வாகம் இராணுவத்தில் மூன்றாம் பாலினத்தவர் சேர்வதை தடுத்து வைத்திருந்தார். ஏற்கெனவே சேவையில் இருந்த மூன்றாம் பாலினத்தவரை அப்படியே அனுமதித்தது.

மூன்றாம் பாலினத்தவர்களை இராணுவத்தில் வைத்திருப்பதால் உண்டாகும் மிகப்பெரிய செலவுகள் மற்றும் இடையூறுகளின் அழுத்தம் இல்லாமல் அமெரிக்க இராணுவம் தீர்க்கமான மற்றும் மிகப்பெரிய வெற்றிகளை பெறுவதில் கவனம் செலுத்த வேண்டும் என்று ஜனாதிபதி வலியுறுத்தியிருந்தார்.

கடந்த 2021 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதியாக ஜோ பைடன் பதவியேற்றதும் இந்த முடிவினைத் திரும்பப் பெற்றார்.

# இன்றைய ராசி பலன்கள் - 16.02.2025




சில செயல்களில் தாமதங்கள் காணப்படும். பதற்றத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். ஆன்மீக ஈடுபாடு உங்களை அமைதிப்படுத்தும்.

உங்கள் முக்கியமான பணிகளை முடிக்க இயலாது. தாமதங்கள் ஏற்படும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்கத் திட்டமிட வேண்டியது அவசியம்.

இன்று நீங்கள் உங்கள் துணையை திருப்திபடுத்த இயலாது. உங்களால் முடிந்த அளவு இனிமையாகப் பேசி நிலைமையை சீராக்குங்கள்.

இன்று அதிர்ஷ்டம் குறைவான நாள். பணப்புழக்கம் காணப்பட்டாலும் தேவையற்ற செலவுகள் காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படாது. தூக்கமின்மை காரணமாக இன்று ஆரோக்கியம் குன்றி காணப்படும். முடிந்தால் நன்கு உறங்க முயற்சி செய்யுங்கள்.




இன்று உங்களுக்கு மிகவும் அமைதியான நாளாக அமையும்.சௌகரியமான நாளாக அமையும்.திருப்தியுடன் காணப்படுவீர்கள்.நீங்கள் பெரிதாக எதையோ சாதித்தது போன்று உணர்வீர்கள்.

நீங்கள் உங்கள் பணியில் இன்று இரகசியத்தை காப்பீர்கள்.நீங்கள் பணியாற்றும் முறை உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும்.

இன்று உங்கள் துணையுடன் இருப்பதை சொர்கத்தில் இருப்பது போல உணர்வீர்கள். இன்று மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

இன்று சேமிக்கும் பழக்கத்தை உருவாக்கிக் கொள்வீர்கள். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும். இன்று சுதந்திரமான நிதிநிலைமைக்கு வாய்ப்பு உள்ளது.

உங்கள் மனதில் நம்பிக்கை தரும் எண்ணங்களும் மகிழ்ச்சியும் காணப்படும்.




இன்று மகிழ்ச்சியாக இருப்பதற்கு உற்சாகமானதாக எதுவும் காணப்படாது. நீங்கள் குழப்பத்துடன் காணப்படுவீர்கள். நீங்கள் எடுத்த முடிவு தவறாக முடியும்.

பணியில் வளர்ச்சி குறைந்து காணப்படும்.பணிச்சுமை அதிகமாக இருக்கும்.பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க திட்டமிட வேண்டியது அவசியம்.

உங்கள் துணையுடன் உறவாடும் போது சில சிக்கல்கள் காணப்படும். இது இன்றைய நாளின் இனிமையை பாதிக்கும்.

இன்று நிதி வளர்ச்சிக்கு உகந்த நாள் அல்ல. உங்களிடம் இருக்கும் ஒவ்வொரு பணத்தையும் சேமிக்க வேண்டும்.

தோல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் உருவாகலாம். எண்ணெய் பதார்த்தங்கள் உட்கொள்வதை தவிர்க்கவும்.




இன்று மகிழ்ச்சி குறைந்து காணப்படும். குறைந்து காணப்படும் தன்னம்பிக்கையை அதிகரித்துக் கொள்ளுங்கள். சில புத்திசாலித்தனமான திட்டமிடல் வெற்றியின் உச்சத்தை அடைய வழிகாட்டும்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. பணிகளை திட்டமிட்டு கவனமுடன் ஆற்றுவதன் மூலம் தவறுகள் நேராமல் பார்த்துக் கொள்ளாலாம்.

உறவில் நல்லிணக்கத்தைப் பராமரிக்க உங்கள் துணையுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

எதிர்பாராத வகையில் பண இழப்பு ஏற்படலாம். செலவுகளை கட்டுபடுத்த வேண்டும். பணத்தைக் கவனமாகக் கையாள வேண்டும்.

உங்கள் தாயாரின் சிறிய உடல் நிலை பிரச்சினை ஒன்றிற்காக பணம் செலவு செய்ய நேரலாம்.




இன்று திருப்தியான பலனை பெறுவதற்கு உங்கள் மனதை அமைதியாக வைத்திருக்க வேண்டியது அவசியம். உங்கள் தன்னம்பிக்கையை இழக்காதீர்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும்.எதிர்பார்ப்புடன் நன்மை தீமைகளை ஆலோசித்து அதன்படி பணியாற்றுவது நல்லது.

உங்கள் துணையைப் புரிந்து கொண்டு அவரின் விருப்பங்களை பூர்த்தி செய்ய வேண்டும்.

பயணத்தின் போது பண இழப்புகள் நேரலாம். பணத்தை கையாள்வதில் கவனம் தேவை.

இன்று பதற்றத்துடன் காணப்படுவீர்கள். அதனால் தோள்களில் வலிகள் ஏற்படலாம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.இன்று கூடுதல் பலன்கள் கிடைக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு இன்று திட்டமிடலாம்.

நீங்கள் ஆற்றும் பணியில் வளர்ச்சியைக் காண்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். கடமை உணரச்சி மற்றும் சேவை மனப்பான்மையுடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஒரு விழா குறித்து உங்கள் துணையுடன் இனைந்து திட்டமிடுவீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று அதிக அளவில் பணம் காணப்படும். அதனை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும். உங்களிடம் காணப்படும் நம்பிக்கை உங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக வைத்திருக்கும்.




இன்று மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.இது உங்கள் செயலிலும் எண்ணத்திலும் வெளிப்படும்.தியானம் மேற்கொள்வதன் மூலம் நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

புதிய வேலைவாய்ப்புக்கான சாத்தியம் உள்ளது.இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். பணி செய்வதற்கான சாதகமான நிலை காணப்படும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக உங்கள் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று பண வளர்ச்சி அதிகமாக காணப்படும். சேமிப்பு திட்டங்களில் சேர்வதன் மூலம் நீங்கள் உங்கள் பணத் தேவைகளை மேம்படுத்தலாம்.

உங்கள் ஆரோக்கியம் சிறந்து காணப்படும். உங்களிடம் ஆற்றலும் உறுதியும் நிறைந்து காணப்படும்.




உங்கள் எதிர்மறை எண்ணத்தை வெளிப்படுத்துவீர்கள்.அதனை தவிர்ப்பது நல்லது. இல்லையெனில் முன்னேற்றம் காண்பது அரிது.யதார்த்தமான அணுகுமுறை தேவை.

உங்கள் பணியில் தவறுகள் நேரலாம்.இதற்கு உங்களின் கவனக் குறைவே காரணமாக இருக்கும். இதை நீங்கள் தவிர்ப்பது நல்லது. திறமையான முறையில் ஒழுங்கமைத்து பணியாற்றினால் வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையிடம் அன்பைக் கொடுத்து அன்பைப் பெறுதல் என்ற கருத்துடன் இன்று பழகுவது நல்லது. இதனால் மகிழ்ச்சி நிலவும்.

உங்கள் பொறுப்புகள் அதிகரித்து காணப்படும். இன்று இதனை தவிர்க்க முடியாது.

முதுகு வலி மற்றும் செரிமானக் கோளாறு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 16.02.2025




உங்கள் மனதை இன்று தியானம் மேற்கொள்வதன் மூலம் ஓய்வாக வைத்துக் கொள்ள முடியும்.நீங்கள் எதையோ இழந்தது போல உணர்வீர்கள். பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் மனதில் காணப்படும். விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்ளுங்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாகக் காணப்படும். அதனால் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.உங்கள் பணிகளை ஒழுங்கமைத்து பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் உங்களின் ஈகோ உணர்வை வெளிபடுத்தாதீர்கள். நட்புடன் அணுகுங்கள்.

திடீர் செலவுகள் எதிர்கொள்ள நேரலாம். சேமிப்புக்கென்று சிறிது பணத்தை ஒதுக்குவதற்கு முயற்சி செய்வது நல்லது.

செரிமானக் கோளாறுகள் ஏற்படலாம்.




இன்று நீங்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.உங்கள் நலனை மேம்படுத்தும் பயனுள்ள முடிவுகளுக்கான திட்டங்களை மேற்கொள்வீர்கள். எந்தச் செயலாக இருந்தாலும் அதை எளிதில் செய்து முடிப்பீர்கள்.

பிறர் பார்த்து பின்பற்ற முடியாத பாணியில் பணியாற்றுவீர்கள். உங்களின் இந்த தனிப்பட்ட அணுகுமுறை உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெற்றுத் தரும்.

உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள். நீங்கள் ஒருவருக்காக மற்றவர் என்பது போல ஒருமித்த உணர்வுடன் காணப்படுவீர்கள்.

இன்று சுதந்திரமான நிதிநிலைமையுடன் காணப்படுவீர்கள். புதிய முதலீடுகள் செய்வதற்கு இது உகந்த நாள்.

இன்று சகஜமாகவும் துடிப்புடனும் காணப்படுவீர்கள். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று மிகுந்த ஆற்றல் காணப்படும். வெற்றி பெற வேண்டும் என்ற உறுதி உங்களிடம் இருந்தால் இன்றை நாள் உங்களுக்கானது. சுய திட்டமிடல் மற்றும் புத்திசாலித்தனம் மூலம் உங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

பணிநிமித்தமான பயணங்களுக்கு வாய்ப்பு உள்ளது. வெற்றி பெறுவதற்கு கடின உழைப்பு தேவை.

நீங்கள் இருவரும் தகுந்த பொருத்தமுடையவர்கள். உங்கள் துணையிடம் நேர்மையுடன் நடந்து கொள்வீர்கள்.

எதிர்பாராத வகையில் பணம் வருவதற்கான வாய்ப்பு உள்ளது. பூர்வீகச் சொத்து கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று ஆற்றல் மிகுந்து காணப்படுவீர்கள்.




நீங்கள் விருந்துகள் மற்றும் ஆன்மீகச் சொற்பொழிவுகளில் கலந்து கொண்டு இன்றைய நாளை பயனுள்ளதாக ஆக்குவீர்கள். நீங்கள் மனதுக்கு ஆறுதல் அளிக்கும் பிரார்த்தனையில் ஈடுபடுவீர்ககள்.

பணியில் பதற்றம் காணப்படும். பணியிடத்தில் காணப்படும் சூழ்நிலையை அனுசரித்து நீங்கள் செயல்பட வேண்டும். அதற்கேற்றால் போல பணிகளை திட்டமிட வேண்டும்.

இன்று நீங்கள் பதற்றத்துடனும் உணர்ச்சி வசப்பட்டும் காணப்படுவீர்கள். இதனை தவிர்த்து உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்ள வேண்டும்.

பண இழப்புக்கான வாய்ப்புகள் உள்ளது. இன்று பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்ய வேண்டியது அவசியம்.



# நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையம் வழமைக்குத் திரும்பி விட்டதாக அறிவிப்பு

(க.மகாதேவன்)

திடீரென நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மின் தடையைத் தொடர்ந்து செயலிழந்திருந்த நுரைச்சோலை லக் விஜய நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தின் அனைத்து மின் உற்பத்தி இயந்திரங்களும் மீண்டும் இயங்கும் நிலைக்குத் திரும்பியுள்ளன.

அதன்படி, தற்போது இரண்டு மின் பிறப்பாக்கிகள் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளன எனவும், தேவைப்பட்டால் மற்றைய மின் பிறப்பாக்கியையும் மின் கட்டமைப்புடன் இணைக்க முடியும் என்றும் அந்த மின் உற்பத்தி நிலையத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த 9 ஆம் திகதி நாடு முழுவதும் ஏற்பட்ட திடீர் மின் தடையைத் தொடர்ந்து, நுரைச்சோலை மின் நிலையத்தின் பாதுகாப்பு அமைப்பு செயற்பட்டதால், அதன் 3 மின் பிறப்பாக்கிகளும் செயலிழந்தன.

இதன் விளைவாக தேசிய மின் கட்டமைப்பிற்கு 900 மெகாவாட் மின்சார திறன் இழப்பு ஏற்பட்டது.

நிலைமையை நிர்வகிக்க, இலங்கை மின்சார சபை 10 மற்றும் 11 ஆம் திகதிகளில் ஒன்றரை மணி நேரமும், 13ஆம் திகதி ஒரு மணி நேரமும் நாடு முழுவதும் நேர அட்டவணைக்கு அமைய மின்சார விநியோகத்தைத் துண்டிக்க நடவடிக்கை எடுத்தது.

இருப்பினும், நேற்று முன்தினம் காலைக்குள், நுரைச்சோலை மின் நிலையத்தில் உள்ள மூன்றாவது மின் உற்பத்தி இயந்திரம் மின் கட்டமைப்பில் சேர்க்கப்பட்டது.

இதன் விளைவாக, தினசரி மின் விநியோகத் துண்டிப்பு முடிவுக்கு வருவதாக வலுசக்தி அமைச்சு நேற்று முன்தினம் அறிவித்தது.

செயலிழந்த நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் முதல் மின் உற்பத்தி இயந்திரமும் நேற்று பிற்பகல் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டதால், அந்த மின் உற்பத்தி நிலையத்திலிருந்து 600 மெகாவாட் மின்சார திறன் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.